NALLUR MUNICIPAL COUNCIL JAFFNA

விலை ரூபா 1:25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 8 ஸபர் 20 இதழ் 257

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-10-1986

## 'பாதுகாப்புவழங்குவதுஎனது அதிகாரத்துக்குட்பட்டதல்ல' -அரச அதிபர்

யாழ்ப்பாணம், சனி

அரசாங்க ஊழியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு வசதிகளையும் என்னால் செய்து தரமுடியும் என்று உறுதி அளிக்கமுடியாது. எத்தகைய பாதுகாப்பு வழங்குவதும் எனது அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல.

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் நேற்று கோட்டை இராணுவமுகாமை அகற்றக்கோரி நடைபெற்ற அரசாங்க திணைக்கள உத்தியோகத்தர்களின் பிரதிநிதிகளின் மாகாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் இம்மகாநாடு நடைபெற்றது.

அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் அங்கு மேலும் பேசுகையில்; சிவில் நிர்வாகத்தை மட்டுமே என்னால் நடாத்தமுடியும் பாதுகாப்பு விடயம் எனது அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல கோட்டை இராணுவ முகாமை அகற்றவோ "ஷெல்" பிரயோகத்தைத்தவிர்த்து உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியும் என்று உறுதியளிக்கவோ

(5ம் பக்கம் பார்க்க)

● தன்மானத்துடன் சுதந்திரமாக வாழ-பொருளாதாரத்தை மேம்படுத்த

# தமிழீழ தனிஅரசு அமைப்பதே ஒரேயொரு வழி- சமரசப்பேச்சுக்கள் எமது அழிவுக்கே -பிரபா

(நமது நிருபர்)

"தன்மானத்துடன் சுதந்திரமாக-நிம்மதியாக வாழ்ந்து எமது சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதாயின் எமக்கு தமிழீழ தனியரசை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை திரு பிரபாகரன் நேற்று வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

"சமாதானப் பேச்சுக்கள் என்றும் சமரசத் திட்டமென்றும் மாநில சுயாட்சியென்றும் நாடகமாடுவது எமது விடிவுக்கு வழிகோலவல்ல எமது அழிவுக்கு வழிகோலவே"

தேசிய விடுதலைப் போராட்டத்தை திருப்பி விடுதலைப் போராளிகளை நிராயுதபாணிகளாக்கும் சூழ்ச்சி நோக்குடனேயே இந்தச் சமாதானப் பேச்சென்னும் பொறிக்கிடங்கு கிண்டப்படுகிறது. எதிரியின் சூத்திரதார நோக்கம் எமக்குத் தெரிவதால் இந்தப் பொறிக்குள் நாம் ஒருபொழுதும் சிக்கப்போவதில்லை. ஆனால் இந்தப் பொறிக்குள் எமமை விழுத்திவிட எதிரியுடன் கைகோர்த்து நின்று சமரசம் பேசும் இனத்துரோக கும்பல்கள் பற்றி நாம் விழிப்பாக இருக்கவேண்

(5ம் பக்கம் பார்க்க)

## அடம்பன், மாந்தைப்பகுதிகளில் இராணுவத்தாக்குதலில் 7 பேர்பலி; மூவர் படுகாயம்

### குண்டு வீச்சால் 10 வீடுகள் தரைமட்டம்

[நமது நிருபர்]

மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன், மாந்தைப் பகுதிகளில் இராணுவத்தினரின் தாக்குதல்களால், 7பேர் பலியானார்கள். இரு இளம் பெண்கள், 5 வயது குழந்தை படுகாயமடைந்தார்கள், 10 வீடுகள் விமானக்குண்டு வீச்சால் தரைமட்டமாக்கப்பட்டன. மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இராணுவத்தினர், அடம்பன், மாந்தைப்பகுதிகளில் தேடுதல் நடவடிக்கையிலீடுபட்டிருந்தது தெரிந்ததே.

அடம்பனில் தேவசகாயம் [75 வயது[, தங்கம்மா (70 வயது) தம்பிராசா (70வயது), டெய்ஸி 65வயது), மற்றும் மாந்தையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று வியாபாரிகள் உட்பட 7பேர் பலியானார்கள்.

அடம்பனில் சாய வீதியில் 5வயதுக் குழந்தை மற்றும்இரு பெண்கள் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமுற்று ஆபத்தானநிலையில் உள்ளனர்.

இரு விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதால் 10 வீடு

[5ம் பக்கம் பார்க்க]

### ஊழியர் சந்திப்பு

யாழ். தபால் அதிபர் திரு செல்வராசாவை கைதுசெய்து அழைத்துச் சென்ற ஈ. பி ஆர். எல் எவ். இயக்கப் போராளிகளைச் சந்தித்து தபால் அதிபரின் விடுதலை பற்றி தபால் ஊழியர்கள் பேசிக்கொண்டனர் என்று தெரிகிறது. (ச)

## விடுதலைப்புலிகளின் தமிழீழ கிராமிய நீதிமன்றங்கள்

(அலுவலக நிருபர்]

தமிழீழப் பிரதேசங்களில் சீர்குலைந்துள்ள நீதி நிர்வாக அமைப்புக்குப் பதிலாக புதிய நீதி நிர்வாக அமைப்பைத் தோற்றுவித்து தமிழீழப் பிராந்தியங்களுக்குத் தமிழீழதேச சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி நிர்வகிக்கும் முகாமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் தமிழீழ கிராம நீதி மன்றங்கள் நிர்வகிக்கப் பட்டுள்ளன

இந்தக் கிராம நீதிமன்றங்கள் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு ரீதியாக உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுவதாக விடுதலைப் புலிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நீதிமன்றங்கள் குறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'தமிழீழ மக்களிடையே எழும் பிரச்சினைகள் சட்ட விரோத செயற்பாடுகள் என்பனவற்றிற்கு உரிய இணக்கத்தையும், தீர்ப்பையும் வழங்கி எமது இனத்தினுள்ளே சட்டம் ஒழுங்குடன் கூடிய

(5ம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தைக் கலக்கிய ரேடியோ குண்டு

கொழும்பு வெள்ளி

புத்தளத்தில் ரேடியோக் கடைவைத்திருக்கும் என் கே. முனிதாசா என்பவரது ரேடியோக்கடையில் பெரும் பரபரப்பு ஒன்றினை ரேடியோக் குண்டு ஒன்று உண்டாக்கியது இதனால் நகரே பதட்டம் அடைந்தது

வனாத்தமுல்லையில் இருக்கும் குசுமாவதி என்பவர் முனிதாசவின் ரேடியோக் கடைக்கு இந்த ரேடியோவைக் கொண்டுசென்று கொடுத்தார் என அறியப்படுகின்றது ரேடியோவைத் திறந்து பார்த்த தொழிலாளி அந்த ரேடியோவின் பின்பகுதியில் ஓர் 'ஒடிக்கலோன்' போத்தல் இருப்பதை அவதானித்தார். இது

(5ம் பக்கம் பார்க்க)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

மலிவு விற்பனை

எமது வாடிக்கையாளர்களை புதிய முகவரிக்கு அழைக்கும் முகமாக

எமது நிறுவனம் 31-ந் திகதி வரை

நாம் அவர்களுக்கு வழங்கும் தீபாவளி மலிவுவிற்பனை

லண்டன் காமென்ஸ் உற்பத்திகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரை சகலருக்கும் ஏற்ற அணி ஆடைகளை விசேட விலைக்கழிவும் மலிவுவிலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது நிறுவனம் தீபாவளியையொட்டி ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும்

லண்டன் காமென்ஸ்,

(சத்திரச்சந்தி அருகாமையில்)

235, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C 5405) போன். 23603

## யாழ். மாவட்டத்துக்கு, நுவரேலியாவிலிருந்து 300 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணம் சனி

யாழ். மாவட்டத்திலுள்ள உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையளர்களுக்கு நுவரெலியாவிலிருந்து 300 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு தருவிக்க யாழ். மாவட்ட அமைச்சு முடிவுசெய்துள்ளதாக அமைச்சின் செயலாளர் திரு, பாலசிங்கம் தெரிவித்துள்ளார்,

இந்த விதை உருளைக் கிழங்குகள் கமநலச்சேவைப் பிரி

[5ம் பக்கம் பார்க்க]

## இலங்கை இனப்பிரச்னை பொது உருவாக்கம் தயாரிப்பதில் புதுடில்லி அதிகாரிகள்

புதுடில்லி, ஒக் 24,

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் முகமாக இலங்கை அரசாங்கம் அனுப்பிவைத்த யோசனைகள், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமர்பித்த மாற்று யோசனைகள், ஆகியவற்றின் அடிப்படையில் பொதுவான உருவாக்கம் ஒன்றை தயாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புதுடில்லியிலுள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கும் இந்திய உயர் ஸ்தானிகர் ஜே என். டிக்ஷிற் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமிழர் கூட்டணி, பல தரப்பட்ட அம்சங்கள் தொடர்பாகத் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறிப்பாகப் புதிய

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு நாள் சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு வளர்ப்பவர்கள் தொடர்புகொள்ளவும். அண்ணு பாம், இணுவில். (A-3001)

கடைக்குரிய ஷோகேஸ்கள், சோடாப் போத்தல் ராக்கை, Cashier's Counter ஆகியன சகாய விலையில் விற்பனைக்குள்ளன விளம்பரதாரர்: M 61, மே/பா dyn ads, கவிதாஸ்-டைனமிக்கா காட்சியறை, இல 22, நவீனசந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம். T. P. 24149. [A 1492]

Usha குளிர்சாதனப்பெட்டி ஒன்று நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சிற்றி சொப் 18/2, விதானையார் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (C 5376)

தீபாவளி மலிவு விற்பனை. புதிய, நவீனமான உருக்குத் தளபாடங்கள் பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T V.Stands, Book Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான தளபாடங்கள் விலை குறைப்பு தீபாவளிவரை மட்டுமே. கவிதாஸ்-டைனமிக்கா காட்சியறை, இல: 22, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24149. [C 1491]

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அல்மாரி, கட்டில் மெத்தைகள், Formica சாப்பாட்டு மேசைகள், Teak கதிரைகள், வயலின், Ladies சைக்கிள், Kenwood Chef, Carrom Board, 14'' National கலர் T V, T.V Stand Show case, கசற் றேடியோ, எவர்சில்வர், பித்தளை, கிளாஸ், கோப்பை வகைகள் Pyrex Ice flask, Fans, Water filter, Johnson Dinner Set, பெரிய தேக்கு Show case மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [C 5365]

## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு கூட்டுறவாளர் வீதியில் M P C S இற்கு அருகாமையில் கிணற்றுப்பங்குடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பர இல C 5319 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C5319)

[1] Three in one Akai set [AC 3800]. 2. தூய இன அல்சேஸியன் [7 மாதம் பெண்] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: V செல்வராஜா, 132 ஆடியபாதவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [C 5382]

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் ஒரு வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல. C 5361. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 5361]

நன்கு அனுபவம் உள்ள சமயல்வேலை தெரிந்தவர் றோல்ஸ் பற்றிஸ் தயாரிக்கக் கூடியவர்களும், தேநீர், கோப்பி தயாரிக்கக் கூடியவர்களும் தேவை. நேரில் வரவும் நிக்கோ, 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C 5370]

யாழ்நகரிலுள்ள பிரபல ஹோட்டலில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன சமையல்காரர்/சுவீட் தயாரிப்பாளர்: உணவுபரிமாறுபவர்கள் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல A 3002 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (A 3002)

கிளிநொச்சியிலுள்ள கருணை நிலயத்துக்கு பெண் அதிபர் தேவை. மிஷனரிநாட்டமுள்ள குடும்பப் பொறுப்பற்றவரும் அனாதை இல்லம். மனையியல், தையல் பயிற்சி நிலையங்களை பொறுப்புடன் நிர்வகிக்கும் திறமையும் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்புசெய்யும் ஆற்றலும் அவசியம். இளைப்பாறிய ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். நவம்பர் 10ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் ஆர்ச்டீக்கன், சென்யேம்ஸ் தேவாலயம், நல்லூர், யாழ்ப்பாணம். [C 5366]

யாழ்நகரைச் சேர்ந்த சிறிய குடும்பத்துக்கு கொழும்பில் சமையல் வேலைபார்ப்பதற்கு பெண்தேவை. உணவு இருப்பிடவசதி கொடுத்து சம்பளம் ரூ 300/- கொடுக்கப்படும் அன்பாய் கவனிக்கப்படுவர் விரும்பியோர் 25-10-86 அல்லது 26-10-86 திகதிகளில் காலை 8-00 மணிதொடக்கம் 12-00 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி T. சவரிமுத்து, 51, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [C 5362]

## சேவை

உங்கள் இல்லத்துக்கு தேவையான சகல விதமான நவதானிய வகைகள், பால்மா வகைகள், பாடசாலை உபகரணங்கள், கோழித்தீன் மற்றும் கால்நடை உணவுகள் உங்கள் வீட்டில் இருந்தபடியே பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளவும்: M.G M, 777. K,K S Road, Jaffna T. P. 22611 [C 5048]

உங்களிடம்உள்ளபழையவீட்டுப் பாவனைப் பொருட்களை உடன் எம்மிடம் விற்கவோ அல்லது மாற்றுதல் செய்யவோ உடன்தொடர்புகொள்ளவும் வெளிநாடு செல்பவர்களும் உங்கள் பொருட்களை நியாய விலைக்கு உடன் விற்பனை செய்ய உடன் தொடர்பு கொள்ளவும்:- M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [C 5364]

## கல்வி

G. C. E. [O.L] இல், சட்டாய பாடமாகிய கணித பாடத்தின் கடந்தகால வினாப்பத்திரங்கள் ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்கு வீடுகளிற் சென்று செய்து காண்பிக்கப்படும். சகல போசன்களும் ஒரு மாதத்திற்குள் நிறைவேற்றப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குழி (C 5383)

SERVICE

Laminating Protects and Preserves for Generation permanently seal all your valuable certificates photos and documents in tough crystal clear polyester films Gnanams Studio, Clock Tower Road, Jaffna. or Pathinathan, 118. Forth Cross Street, Jaffna. (C5335)

### வகுப்புகள்

G C.E O/L Dec. 86. மாதிரி ஆங்கில வினாத்தாள் மீட்டல் வகுப்புகள். இலவச வினாப்பத்திரங்களுடன் ஆரம்பம் கிழமை நாட்களிலும், வார இறுதியிலும் 2-11-86/ 3-11-86 விபரங்கட்கு தொடர்பு: S B. IYAR, 12, வைமன்வீதி, நல்லூர். (C5347)

உயர்திரு.
வ. வ.
இராமசாமிப்பிள்ளை
அவர்களின்

### அந்தியேட்டி அழைப்பு



அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், வாழ்வின் வழிகாட்டியாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 26-10-86ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கே. கே. எஸ். வீதி,
வல்வெட்டித்துறை.
C 5386

### ஓராண்டு நினைவஞ்சலி



நடேசு இராசேந்திரம்
[சாந்தா - லலித்]

தமிழ் மண்ணில்:
26-10-1963
தமிழ் மண்ணைவிட்டு:
25-10-1985

நம் தமிழினத்தின் அடிமைவிலங்கைஉடைத்தெறியபுறப்பட்ட எங்கள் குலக்கொழுந்தே உன்பிறப்புக்களை மறந்து விடுதலைக்களத்திலேவீரப்புலியானாய்! உன் வீரத்தையும் தியாகத்தையும் கண்டு வன்னிமண் புகழ்ந்ததே! அந்தவிடுதலைகிடைக்குமுன்வெறி பிடித்தவர்களின் குண்டுகள் உன் உயிரைக் குடித்து விட்டதே தம்பி சாந்தா உன்னோடு வந்த எங்களின் உடன் பிறப்புக்கள் லோரன்ஸ், சபா, ஜீவன் அத்தனை தம்பிகளின் இழப்பையும் தமிழ் ஈழம் மறக்குமா.

தம்பி சாந்தா கூடிப்பிறந்தோம் குழந்தை என்றே அழைத்தோம். உன் உயிரைக் குடித்தவன் அந்த உடலைத்தான் விடவில்லையே. சிதைத்துவிட்டார்கள். உன் உடல் தான் அழிந்தாலும் உங்கள் இலட்சியம் அழியவில்லையே. எங்கள் அருமைத்தம்பி சாந்தா உன் பிரிவால் வாடுகின்றோம். எங்களுக்கு ஆறுதல் கூற எழுந்து வரமாட்டாயா?

உன்பிரிவால் வாடும்: அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், மருமக்கள், நண்பர்கள், உறவினர்கள்.

பூரண இல்லம்'
முள்ளியவளை.
C 5379

Gestetner Roneo Machine
REPAIR / SERVICE
உடன் கவனிக்கப்படும்.
விபரங்களுக்கு தொடர்புகொள்க:-
அம்பலவாணர் அன் சன்ஸ்,
196, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24291
(A2812)

## உடன் விற்பனைக்குண்டு

விரைவில் பலன் தரக்கூடிய நல்ல இன தென்னம் பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

தென்னை ஆராய்ச்சியாளர்களின் போதனைக்கமைய நாற்று போடப்பட்டவை.

மலிவு விலையில் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

(1) ஷப்ரு றிலேற்றஸ்
தென்னந்தோட்டம்
குடமியன்,
வரணி.
(C 5352)

(2) மின்சாரநிலைய வீதி,
இல. 15, 2ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

### போஷாக்கு வாரவிழா

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் பிரதேசஆரம்ப சுகாதாரகவனிப்பு நிலயத்தினர் நடாத்தும் போஷாக்கு வாரவிழா நாளை 26ம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற உள்ளது.

சிறப்புச் சொற்பொழிவுகளை டாக்டர் குணராஜசிங்கம், டாக்டர் சிவயோகம், திருமதி கைலாசபதி ஆகியோர் நடாத்துவார், விவாதஅரங்கு, கவியரங்கு, நாடகம்என்பனவும் நடைபெறும். [ஒள]

### வெளிநாடுபயணம்

மாவிட்டபுரம், வெள்ளி

வைத்திய சிகிச்சைக்காக வெளிநாடுசெல்லும் மயிலிட்டி பங்குத்தந்தையும், முன்னாள் மயிலிட்டி பிரஜைகள்குழு தலைவருமான வண தேவராஜன் அடிகளை பெருந்திரளான மக்கள் கண்ணீர்மல்க வழியனுப்பிவைத்தனர்.

இவருக்கு மயிலிட்டி மாதா கோவில் மைதானத்தில் பிரிவுபசாரவிழா ஒன்று எடுக்கப்பட்டு பின்னர் மயிலிட்டி, ஊறணி, பலாலி பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மக்கள் யாழ்ப்பாணம்வரை அவரை அழைத்துச் சென்று வழியனுப்பிவைத்தனர்.

### 6-ம் மாத நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



கந்தவனம்
இரத்தினராசா
(ரத்தி)

பிறப்பு: 30-06-1961
அழிப்பு: 01-05-1986

ரத்தம் உடல் உயிரை லட்சியத்திற் கர்ப்பணித்தோன் 'ரத்தி' யென்பான் கொள்கை தனில் ரத்தினந்தான் தத்துவத்தில் நித்திலந்தான் தங்கத்துரை தானையிற்றான் முத்தனையனினைந்து தன் முழுநேர உழைப்பீந்தான் யுத்தமதில் தமிழ்க்குயிரைத் தத்தந் சரநின்றவன் சத்த மின்றிச் சான்றுமின்றிச் சதியாலே கொன்றதுமேன்? புத்தன் அவன் பக்தரைப் போல் பொல்லாங்கு புரிந்ததுமேன்? நித்தம் இவன் நினைவில் எம் நெஞ்சமெலாம் எரிவதுமேன்?

1986-10-26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணக் கிருத்தியத்தில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புத்தாயார், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்மார், அண்ணிமார், மக்களும் மருமக்களும்.

''ஜெகா இல்லம்''
ஞானசாரியர் வீதி,
தன்னை தெற்கு,
கரவெட்டி. C 5344

# பெஷாவர் நகரில் பாகிஸ்தான் விமானவிபத்து;

# 17 பேர் பலி!

## வாண வேடிக்கை காரணம்?

லாகூர், அக். 24

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் நேற்று பாகிஸ்தான் பயணிகள் விமானமொன்று விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் 4 விமானச்சிப்பந்திகள் உட்பட 17 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர். இவ்விபத்துக்கு வானவேடிக்கை நிகழ்ச்சியொன்று காரணமாக இருக்கலாமெமன நம்பப்படுகின்றது.

பாகிஸ்தான் சர்வதேச விமானச் சேவையின் [பி. ஐ ஏ.) விமானமொன்றே விபத்துக்குள்ளானது. இவ்விமானம் நேற்று உள்ளூர்ச்சேவையில் ஈடுபட்டிருந்தது.

லாகூரிலிருந்து பெஷாவார் நோக்கி இவ்விமானம் சுமார் 50 பயணிகளுடன் வந்துகொண்டிருந்தது. பெஷாவார் விமானநிலையத்தில் இறங்குவதற்கு 3 நிமிடங்களுக்கு முன்னரே இவ்விமானம விபத்தில் சிக்கியது எனத்தெரிவிக்கப்பட்டது.

விபத்து இடம்பெறுவதற்கு முன்னர் அவ்விமானத்தின் விமானி கட்டுப்பாட்டுக்கோபுரத்துடன் தொடர்புகொண்டுள்ளார். விமானம் இறங்கவுள்ள பாதைப்பகுதியில் திருமணக் கொண்டாட்டமொன்றில் சிலர் வான வேடிக்கையில் ஈடுபட்டிருந்ததை அவர் கட்டுப்பாட்டறைக்குத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பாதையை மாற்றும்படி கட்டுப்பாட்டுக் கோபுரம் விமானிக்கு உத்தரவிட்டது. ஆயினும் அவ்விமானம் தரையிறங்குவதற்கு மூன்று நிமிடங்களுக்குமுன்னர் விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தை நேரில் கண்டோர் அவ்விமானம் ஆகாயத்தில் கரணம் போட்டபடி கீழ் நோக்கிவந்து இரண்டாகப் பிளந்து தரையில்விழ்ந்ததெனத் தெரிவித்தனர். அத்துடன் கீழே விழ்ந்த அவ்விமானத்திலிருந்து 4பேர் உயிர்தப்பிஓடிச் சென்றதையும் கண்டதாகத் தெரிவித்தனர்.

17பேர் இவ்விபத்தில் இறந்துள்ளனர். 30பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வேறுசிலரைக் காணவில்லை என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலகச் செய்திகள்**

## மத்திய பிரதேஷில் ரயில் விபத்து: 13 பேர் பலி!

புதுடில்லி அக். 24

இந்தியாவின் மத்தியபிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் 13பேர் கொல்லப்பட்டனர். 50பேர் காயமடைந்தனர்.

மத்திய பிரதேஷின் 'தாஜ்பூர்' ரயில்நிலையத்தில் இவ் விபத்து இடம்பெற்றது. இந்த ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில்பெட்டிகள்சில, திடீரென பின் நோக்கி நகர்ந்துசென்று அந்த ரயில் நிலையத்துக்கு வந்துகொண்டிருந்த கடுகதி ரயில் வண்டியுடன் மோதியதையடுத்தே விபத்து நிகழ்ந்தது.

ரயில் பாதைகளை மாற்றும் கருவி இயக்கப்படாததனாலேயே அப்பெட்டிகள் பின்னோக்கிச் சென்றிருக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டது.

'தாஜ்பூர்' ரயில் நிலையத்துக்குவந்த அகமதாபாத் கடுகதி வண்டியே அப்பெட்டிகளுடன் மோதியது இதனையடுத்து அக்கடுகதியின் என்ஜின் வண்டியும், வேறுசில பெட்டிகளும் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகின

## "பொது நிலையினர் சமய, சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்"

யாழ்ப்பாணம், சனி

"இன்றைய காலகட்டத்திலே பொதுநிலையினர் மிகக் கூடிய தொடர்பினைத் திருச்சபையோடுவைத்துக்கொள்ள வேண்டும்" என்பதையே இரண்டாம் வத்திக்கான் சங்கம் நமக்கு அறிவுறுத்தியுள்ளது. இதனால் தான் இன்று பொதுநிலையினர் தத்தம் பங்குகளில் பங்குத்தந்தையோடு சேர்ந்து எத்தனையோ சமய, சமூகப் பணிகளில் ஈடுபடுகின்றார்கள். இது ஒரு மாற்றமும், முன்னேற்றமும் ஆகும். அத்துடன் அத்தியாவசியமுமாகும்" இவ்வாறு யாழ். மறைவட்டார முதல்வர், வண எஸ். எச். ஜெபநேசன் அடிகளார் மேற்படி சபையின் ஆரம்பவிழாவிற்குத் தலைமை தாங்குகையில் கூறினார்.

மேற்படி ஆரம்பக்கூட்டம் யாழ். புனித மரியாள் பேராலயப் பங்குமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு யாழ் புனித மரியாள் பேராலயப்பங்குத் தந்தையும், யாழ். மறைவட்டார முதல்வருமான அருட் திரு எஸ் எச். ஜெபநேசன் அடிகள் தலைமை வகித்தார்.

மேற்படி சபையின் யாப்பு விளக்கம் கொடுத்து இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு ஏ. சி செபநாயகம் (மேலதிக அரசாங்க அதிபர், மன்னார்], செயலாளர் திரு. மோ. தார்சீசியஸ், பொருளாளர் திருமதி எம். எம். கே. சவரிமுத்து.

செயற்குழு உறுப்பினர்களாக இருவர் தெரிவுசெய்யப்பட்டனர். (வி)

## போராளிகளுக்கு உற்சாகம் அளிக்க கலைநிகழ்ச்சி அவசியம்

திருநெல்வேலி, வெள்ளி

"போராடி வரும் எமது இளைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை பார்ப்பதன் மூலம் மனதில் உற்சாகம் ஏற்பட்டு சந்தோசத்துடன் மீண்டும் பழைய வேகத்துடன் போராட முடியும்."

இவ்வாறு பாஷையூர் முற்போக்குக் கலா மன்றத்தினரால் பாஷையூர் மக்கள் முன்னேற்ற சன சமூக நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட கவின் கலைக் கல்லூரி ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய கலைஞர் வேல் ஆனந்தன் கூறினார்.

திரு. ப. டே. சற்குணராசா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கலைஞர் வேல் ஆனந்தன் மேலும் கூறியதாவது.

"இந்திய, பாகிஸ்தான் போராட்ட வேளையில் கூட இந்திய இராணுவத்தை உற்சாகப்படுத்தவும் அவர்களின் மன நிலையில் தெளிவை ஏற்படுத்தவும் பல தரப்பட்ட கலை நிகழ்ச்சிகள் அவர்களுக்காக நடாத்தப்பட்டன. இதுபோல் கலைஞர்களாகிய நாம் ஆயுதம் தாங்கி போர்க்களம் சென்று போராட முடியாவிடினும் கலை வடிவங்கள் மூலம் எமது விடுதலை வீரர்களுக்கு உற்சாகம் கொடுத்து எமது பங்களிப்பினை போராட்டத்திற்கு செலுத்த வேண்டும். இதற்காக இது போன்ற எமது பாரம்பரிய கலைவடிவங்களை வளர்ப்பதற்கும் இன்றைய கால கட்டத்தில் கலை நிகழ்ச்சிகள்அவசியம் தேவை" என்றார்.

இவரை தொடர்ந்து திரு செல் ஜோசப் வித்தியாலய அதிபர் திரு. அல்பிரெட், பாஷையூர் புனித அந்தோனியார் வித்தியாலய அதிபர் சங் சகோதரி மரிய கொறற்றி சட்டத்தரணி ரி. எம். அன்ரனிப்பிள்ளை வண. சந்திர போஸ் ஆகியோரும் உரையாற்றினார்கள். (கி)

## பரீட்சார்த்த 'ஷெல்' தாக்குதல்

வவனியா, வெள்ளி

ஈரற்பெரியகுளம் இராணுவ முகாமிலிருந்து 'ஷெல்' பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவனியா பகுதியில் முதல் முறையாக இந்த நடவடிக்கை பரீட்சார்த்த முறையில் இடம் பெற்றுள்ளதாக அறியப்படுகிறது.


எம் டீ சோப் வழங்கும் தீபாவளி அதிர்ஷ்டம்

10 நைலெக்ஸ் சேலைகளைப் பரிசாகப் பெறுங்கள்!

| பங்குபற்றும் முறை |

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்றோர், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 6 x 3 அங்குல அளவு வெள்ளைக் கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம் ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்

5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீலசோப் மேலுறைகளையோ அல்லது ஒரு 'எம் டீ பார் சோப்' மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரைபார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்பவேண்டும்

ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

★ ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 50/- பெறுமதியான பொருட்கள் இனும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

எம் டீ என்ரபிறைஸ், தொழிற்பேட்டை, அச்சுவேலி.

★ 28-10-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




எம் டீ சோப்




விலை ரூபா 2/- மட்டுமே.

தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள்!

[A-745]

### மணிவாக்கு

உயர்ந்த விடயங்களை எளிய முறையில் கூறுவதே சால்பின் இலட்சணம்.

— எமர்சன்

## நமது நோக்கு

### காலி கண்ட கம்பீரம்

"சத்தியம் என்றால் என்ன? என்று இயேசு நாதரை வினவிய பொன்டியஸ்பிலாத்து அவருடைய விடையைப் பொறுத்திருந்து கேட்கவில்லை.

அதன்விளைவு கிறிஸ்த்தவத்தின் புதிய ஏற்பாடு.

தர்மம் என்றால் என்ன? தார்மிக சமுதாயம் என்றால் என்ன? ஒன்றை ஒன்று தழுவிய இருவினாக்களை நாம் [illegible] எழுப்புகின்றோம். ஆனால் பிலாத்துவைபோல் விடையை [illegible] அலட்சியம் செய்வது நோக்கமல்ல.

இந்த விடயத்தை பீடிகையாகக்கொண்டு இலங்கை ஜனாதிபதி காலி றிச்மண்ட் கல்லூரியில் நிகழ்த்தியபேருரையே இதனைக் கிளறத் தூண்டியது.

காலி என்றும் காணாத வைபவம் காலியின் மிகப் பிரசித்தி பெற்ற றிச்மண்ட் கல்லூரியின் பரிசுத்தினம். அதன் பிரதம அதிதியான ஜனாதிபதி ஜெயவர்த்தனா அக்கல்லூரிக்கு விஜயம் செய்தது அதுவே முதல் தடவை. 81-இல் நிற்கும் ஜனாதிபதிக்கு பக்கத்துணையாக அமைந்தவர் அக் கல்லூரி வளர்த்தெடுத்த 85ல் நிற்கும் காலி எம்.பியும் கூட்டுறவு அமைச்சருமான விஜயானந்த தஹநாயக்கா.

நல்ல கருத்தையும் இனிமை ததும்பும் சொற்களால் சொல்ல வேண்டும் என்று அறிவுறுத்தும் வள்ளுவர் பாணியில் அமைந்ததே ஜனாதிபதியின் பரிசளிப்புப் பேருரை.

சுடுகாட்டை 'நன்காடு' என்றுமங்கலமாகச்சொல்லுவது போல உயரிய பல கருத்துக்களையும் சில்லறைக் கிண்டல்களையும் கொண்டது இப்பேருரை

பேசும்போதெல்லாம் அவருடைய இன்றைய அமைச்சர் தஹாவை அடிக்கடி பார்த்திருப்பாரென்பது சொல்லாமலே விளங்கும். அமைச்சர்கள், மிகப்பெரிய கல்விமான்கள், பிரதமர் உட்படப் பல பெரியோர்களை உருவாக்கிய கல்லூரி இதுஎன்ற ஜனாதிபதி இதனை இன்றுதான்காணும் வாய்ப்பு உண்டானது என்று சபையோரைக் குதூகலிக்க வைத்தார். இவர்களுள் சிலர் 'என்னுடைய மந்திரி' சபையிலும் உள்ளிட்டிருக்கின்றனர்' என்று பலதடவைகள் தஹாவையும் சபையையும் நகைக்கவைத்தார்.

இவ்வகையில் சபையைச் சனதப்படுத்திய ஜனாதிபதி இன்று நாட்டின் நிலைமைபற்றி பேசாமல் விட்டிருப்பாரா?

தார்மீகம், தார்மீக சமுதாயம் என்ற பெரும் பொருள்களை மிகச்சாதாரணமான, எளிமையான சொற்களில் விளக்கியது. ஜனாதிபதி ஒருவருக்குசொல்வன்மை மிக அவசியமென்பதை வற்புறுத்தியது. தார்மீகமென்றால் சரியென்று கண்டதை விளைவு பற்றி அஞ்சாது செயற்படுவதே என்றார்.

காலியில் அப்பேருரையும் அந்த வைபவமும் தனித்துவ சிறப்புடையவைஎன்று கொள்ளும்போது வடக்கில் அது எவ்வாறுகணிக்கப்படும்?

'சரி பிழை' எவ்வாறு கணிக்கப்படுகின்றது? இங்குதான் விலலங்கம் தொடங்குகிறது வடக்கில் 'சரி' என்பது தெற்கில்சரிகிறது தெற்கில் 'வாழ்வு' என்றால் வடக்கில் தாழ்வு என்று கொள்ளப்படுகின்றது.

பத்திரிகைகள் மற்றும் தொடர்பு சாதனங்கள் மூடி மறைத்தாலும் வடக்கிற்கு வருங்காலம் உண்டென்பது இன்றைய வீரச் செயல்களின் அறிகுறி

''ஆயது காலைதன்னில்
அவுணர் கோன்...
தூயதோர் குமரன்
போரில் தோன்றிய
தோற்றம் கண்டான்''

என்கிறது கந்தபுராணம்.

நல்லூர் குமரனைத் தரிசித்த சிங்களந் பெருமகன் குமாரணதுங்கவை, 'குமரனின்' பிரதியெனக் கணித்தோ அங்கு ஆயிரக்கணக்கில் குவிந்த மக்கள் அவருக்கு ஆதரவு காட்டினார்கள்.

யார் தேவர், யார் அவுணர் இலகுவில் இனங்காணமுடியாத சிக்கல் இது. அறம் எங்கிருக்கிறதோ அது தேவர் பக்கம், எங்கு அறம் நிராகரிக்கப்படுகிறதோ அது அவுணர் பக்கம்.

அவுணர்கோன் யாராயிருந்தாலும் தூயதோர் குமரனைப் போரில் காணவேண்டும். அதற்கு அறமே அருந்துணை.

மனத்துக்கண் மாசு
இலன் ஆதல் அனைத்து
அறன்
ஆகுலநீர பிற

என்கிறார் தெய்வப்புலவர்.

தீய நினைவுகளோடு செய்யும் நற்சொல்லும் நற்செயலும் வெறும் ஆரவாரம் அறமாகா என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இவ்விதி ஆரவாரங்களை வெறுத்து இன்று ஒதுங்கியிருக்கும் காலி எம். பி. தஹா ஐ. தே. கட்சியில் கைதியாகி இருப்பது இந்நாட்டு அரசியலின் விசித்திரம். எங்கும் எதனையும் அச்சமின்றி பேசவும் செய்யவும் வல்ல தஹா இன்று இவை யாவும் 'ஆகுல நீர' என்பதை உணர்ந்தமையால், 85வயது உதயமாக ''குறிப்புமில்லை கொண்டாட்டமுமில்லை'' என்று மௌனம் சாதிக்கிறார்.

அவருடைய 'பொஸ்' ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு அந்த நிலை கிட்டுவதற்கு காலம் உண்டு. 'மனத்துக்கண் மாசிலனாதல் அறம்' என்ற பொருளைத் தமதுபேச்சில் குறிப்பிடாத போதும் சுதந்திர அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் அழகான ஆங்கிலத்தில் கூறியதை எவ்வாறு மறந்திருப்பார்?

''மனச்சாட்சி எனும் உயர்ந்த சுடர்ப்பொறியை இதயத்தில் என்றுமிருக்கும்படி முயல்வீர்களாக'' என்பதை இளம்உள்ளங்களுக்கு வற்புறுத்தியிருந்தால் காலி கண்ட கம்பீரம் கருத்து நிறைந்ததாயிருக்கும்.

# துன்பப்படும் மக்களுக்கு செய்யும்பணி முக்கியமானது

மாவிட்டபுரம், வெள்ளி

இன்றைய சூழ்நிலையில் துன்பப்படும் மக்களுக்குச்செய்யும் பணிதான் முக்கியமானது. இவ்வாறான பணிக்கு ஒவ்வொருவரும் தம்மை அர்ப்பணிக்கவேண்டும். அதையே ஆண்டவரும் விரும்புவார்''.

இவ்வாறு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வேளாங்கண்ணி மாதாஆலய முன்றலில் இடம்பெற்றபிரிவுபசார வைபவத்தில் பதிலுரை நிகழ்த்தும்போது வண ரி ஈ. தேவராஜன் அடிகள் கூறினார்.

அடிகள் வைத்திய சிகிச்சையின் நிமித்தம் வெளிநாடு செல்வதையடுத்து தெல்லிப்பழை புனித யாகப்பர் ஆலயம், வீமன்காமம் யூவானியர் ஆலயம், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வேளாங்கண்ணிஆலயம் ஆகியவற்றின் கத்தோலிக்க கிறிஸ்தவசகோதரர்களும், பங்கு மக்களும், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மனநோயாளர் நலன்புரிச்சங்கத்தினரும் இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

தெல்லிப்பழைஅரசினர்வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ் கதிரவேற்பிள்ளை தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் வண. தேவராஜன் அடிகள் மேலும் தமது பதிலுரையில் கூறியதாவது:

கடந்த 6 ஆண்டுகளாக இப்பகுதியில் நான் கடமை புரிந்தேன். இதில் பொதுமக்களின் கஷ்டங்களை அறிந்து அவற்றுக்கான பரிகாரத்தைக் காண்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தேன். இப்பணிக்கு எனக்கு உதவிய சகலருக்கும் நன்றி கூறுகிறேன் என்று கூறிய அவர் வைத்திய சிகிச்சைக்காக வெளிநாடு சென்றாலும் கூடிய விரைவில் திரும்பி எமது மக்களுக்கு பணி புரிவேன்'' என்றார்.

மற்றும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியர் திரு. ரி. கணேஸ்வரநாதன், தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு இ சபாரத்தினம்கிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை, முன்னாள் தலைமை ஆசிரியர் திரு. எஸ். ஞானப்பிரகாசம், பத்திரிகையாளர் திரு எஸ். ஆர் ஞானசுந்தரம் ஆகியோர் அடிகளாரின் பணிகளைப் பாராட்டிப் பேசினர். அடிகளாருக்கு அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்பட்டன. (வா)

## ''வடக்கு, கிழக்கிலும் விழிப்புலனற்றோருக்கு அரசு உதவவேண்டும்''

மாவிட்டபுரம், வெள்ளி

''தென்பகுதியிலுள்ள விழிப்புலனற்றோருக்கு அரசு பல சலுகைகளை அளித்துவருகிறது. அண்மையில் இலவச போக்குவரத்துவசதிகளைக்கூட அவர்களுக்கு அளித்துள்ளது. இத்தகைய வசதிகளும் வாய்ப்புகளும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் விழிப்புலனற்றோருக்கு கிட்டுமா?''

இவ்வாறு தெல்லிப்பழை வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வெள்ளைப் பிரம்புதின வைபவத்தில் கலந்துரையாற்றிய புனிதம் திருச்செல்வம் விழிப்புலனற்றோர் சங்கத்தலைவர் சட்டத்தரணி கே வி மகாதேவன் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்; கற்று அறிந்தவர்கள்கூட விழிப்புலனற்றோர் கையிலிருக்கும் வெள்ளைப்பிரம்பின் மகத்துவத்தை அறியாதுள்ளனர். மாணவசமு

(5ம் பக்கம் பார்க்க)

# விழிப்புலனற்றோரின் அடையாளச் சின்னம் வெள்ளைப் பிரம்பு

அ. ரவீந்திரன்

வெள்ளை நிறப் பிரம்பு ஒன்றினைத் தமது கரங்களில் ஏந்தியவாறு வீதிகளிற் செல்லும் விழிப்புலனற்றவர்களை நாம் அன்றாடம் சந்திக்கின்றோம். கண் பார்வையற்றவர்கள் தாம் செல்லும் வழியிலுள்ள தடைகளை அறிந்து கொள்வதற்காகவே இத்தடியினைத் தமது கைகளில் தாங்கிச் செல்கின்றனர் என்றே நம்மில் அநேகர் கருதுகின்றனர். ஆனால் இவர்கள் தாங்கிச் செல்லும் இவ்வெள்ளைப் பிரம்புபற்றி நாம் அறிந்திருக்க வேண்டியவை அநேகமுள்ளன.

வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களைப் பொதுமக்களுக்கு அடையாளங் காட்டுகின்ற ஓர் அடையாளச் சின்னமாகும். இது சர்வதேச ரீதியாக, சட்டரீதியாகப் பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவர் நிச்சயமாக ஒரு பார்வையற்றவர், அல்லது மிகவும் குறைந்த பார்வையுடையவர் என்பதை நாம் ஐயமேதுமின்றி அறிந்துகொள்ள முடியும். இவ்வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களைச் சுயமாக இயங்கவைக்க பார்வையுள்ள ஒரு வழிகாட்டியின் உதவியின்றியே ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குச் செல்வதற்குத் துணைபுரிகின்றது. அதனால் விழிதனில் ஒளியிழந்தோரால் இவ் வெள்ளைப் பிரம்பு கண்களுக்குச் சமமானதாக மதிக்கப்படுகின்றது. மேலும், இவ்வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களுக்குத் தேவையேற்படும் பட்சத்தில் உதவிபுரியவேண்டும் என்பதனை ஏனையோருக்கு நினைவூட்டுகின்ற ஓர் சாதனமாகவும் திகழ்கின்றது.

1930-ம் ஆண்டு அமெரிக்க இலினோய் மாவட்டத்திலுள்ள பியோரியா என்னுமிடத்தில் முதன் முதலாக வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமெனச் சட்டத்தில் எழுதப்பட்டது. இன்று சர்வதேச ரீதியாக இவ்வெள்ளைப் பிரம்புக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவருக்குப் பாதையிலே முதலில் நடந்துசெல்லும் உரிமையுண்டு, பாதையை முதலில் கடக்கும் உரிமையுமுண்டு பஸ் போன்ற பொதுப் போக்குவரத்து வாகனமொன்றை எவ்விடத்திலேனும் நிறுத்தி அதில் ஏறிக்கொள்ளும் உரிமையும் உண்டு. வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவருக்கு யாதேனுமோர் விபத்து ஏற்படுத்தப்பட்டால், சாதாரணமாக அவ்வாறான விபத்து ஒன்றுக்கு அளிக்கப்படும் தண்டனையைவிட இவ்விபத்துக்கு அதிக தண்டனை அளிப்பதற்கும் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இவ் வெள்ளைப் பிரம்புக்குப் பல அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் இவை அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் பேணப்பட்டு வருகின்றன. நமது நாட்டு மக்களிடையேயும் தற்போது இவ்வெள்ளைப் பிரம்பை மதிக்கின்ற மனப் பக்குவம் ஓரளவுக்கு உருவாகியுள்ளது. இதனை மென்மேலும் வளர்ப்பதற்குத் தொடர்பு சாதனங்களின் பங்கு மிகவும் மகத்தானது.

பார்வையற்றவர்கள் இந்த வெள்ளைப் பிரம்பின் உதவியுடன் எவ்வளவுதான் தனித்து இயங்கியபோதிலும், தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் பார்வையுள்ளவர்களின் உதவி அவர்களுக்குத் தேவைப்படவே செய்கின்றது. உதாரணமாக சனசந்தடியான ஒரு வீதியைக் கடப்பதற்கு அல்லது குறிப்பிட்ட ஒரு கட்டடத்தைக் கண்டுபிடிப்பதற்குப் பார்வையற்ற ஒருவரால் முடியாதிருக்கலாம்; அவ் வேளையில் அவருக்கு உதவவேண்டியது பார்வையுள்ளோர் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். பார்வையற்ற ஒருவர் தனது வெள்ளைப் பிரம்பின் துணைகொண்டு தான் எடுத்து வைக்கப்போகும் அடுத்த அடிக்குரிய தூரத்தை மட்டுமே உணரமுடியும். அதற்கு அப்பாலுள்ளவைபற்றி உணர்ந்து கொள்ள அவரால் நிச்சயமாக முடியாது. யாராவது வெள்ளைப் பிரம்பைத் தாங்கிய ஒருவர் வீதியிலே யாதேனுமோர் தடையை நோக்கி நடந்து கொண்டிருப்பதைக் காண நேர்ந்தால் உடனடியாக அது பற்றி அறிவித்து, அவர் அத்தடையில் மோதி ஓர் விபத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல் செவ்வனே தனது பயணத்தைத் தொடர்வதற்கு உதவ வேண்டியது பார்வையுள்ள நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பார்வையற்றவர்களும் நம்மைப்போன்ற மனிதர்களே. நம்மைப்போல அவர்களுக்கும் வீதியிலே நடந்து செல்லும் உரிமையுண்டு என்பதனை நாம் மதித்து உணரவேண்டும். சட்டத்திற்காக அன்றி, இயல்பாகவே எமது உள்ளத்திற்றோன்றும் மனிதாபிமான சிந்தனையின் அடிப்படையில் நாம் இவ்வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளித்து அதனைத் தாங்கி வருவோருக்கு உதவ முன்வரவேண்டும். மனித குலத்திற்கு நாம் ஆற்றும் மகத்தான பணிகளில் இதுவுமொன்று என்பதனை நாம் மனதிலிருத்திச் செயற்படுவோமாக.

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

4 அடுப்புகள், Oven, Gri உடன் கூடிய "Phillips" புத்தம் புதிய மின்சார அடுப்பு Cake Mixture, Vegetable Cutter, Fruit Juicer அடங்கிய "Master Chef" புதியது உடன் விற்பனைக்குண்டு. நியூ விக்ரேஸ், யாழ்ப்பாணம். [A-3005]

### முதலாவது பிறந்ததின வாழ்த்து

செல்வன்
க. செயந்தன்

மண்கும்பான் மேற்கைச் சேர்ந்த கனகலிங்கம் குணேஸ்வரி தம்பதிகளின் புதல்வன் செல்வன். செயந்தன் முதலாவது பிறந்த தினத்தை இன்று 25-10 86 தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை வாழ்த்துபவர்கள் அப்பா அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மற்றும் அண்ணன்மார் அக்காமார், தம்பிமார் தங்கைமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மற்றும் இந்தியா சித்தப்பாமார், பிரான்ஸ்மாமா பிரான்ஸ் அத்தை, எல்லோரும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். [C-5395]


## பண்டிதை சத்தியதேவி காலமானார்

யாழ்ப்பாணம், சனி

நீர்வேலியைச் சேர்ந்த பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம் காலமானார்.

இவர் பிரபல சமய பிரசாரகரும், பல மாணவ பரம்பரையை உருவாக்கியவரும் ஆவர்.

இவர் அத்தியார் இந்துக் கல்லூரியில் கல்வி கற்பித்து சில வருடங்களின் முன் ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. [க]


புதிய வெளியீடு
வெலிங்டன்
10-30. 2-30. 4-30. 6-30
பழிக்குப்பழி வாங்கும், திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த
MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
[Adults Only]

லிடோ
கடைசி 2 நாட்கள் மட்டும்
மாலை 2-30, 6-30
கிரபு – நளினி நடித்த
நியாயம்
புதிய வெளியீடு
கஸர்
27ந் திகதி முதல்
புதிய வெளியீடு
Holy Croft Covenant
[Full of Suspense and Action] [Color]


## மரதன் ஓட்டப்போட்டி பாதை விபரம்

(விளையாட்டு நிருபர்)

மாணவர் மன்றமும், மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடாத்தும் விளையாட்டு விழாவில், நாளை ஆரம்பமாகும் பத்துமைல் மரதன் ஓட்டப் போட்டியின், ஓட்டப்பாதைகளின் விபரம் வருமாறு:

நாளை காலை 6 மணிக்கு யாழ். பல்கலைக்கழகச் சந்தியில் போட்டி ஆரம்பமாகி பலாலி வீதி ஊடாக கந்தர் மடம்சந்தி, 'சரணாலயம்' அரசடிவீதி, நல்லூர் வீதி ஊடாக முத்திரைச்சந்தியை அடைந்து பின் பருத்தித்துறை வீதி ஊடாக கோப்பாய்ச் சந்தியை அடைந்து அங்கிருந்து உரும்பிராய் நோக்கி சென்று பின் மருதனமடம் கே. கே. எஸ். வீதி ஊடாக கொக்குவில் சந்தியை அடைந்து பின் ஆடியபாதம் வீதி ஊடாக திருநெல்வேலிச் சந்தியை அடைந்து, பலாலி வீதி ஊடாக ஆரம்ப இடத்துக்கு வந்தடையும்

இடபோட்டியில் பங்குபற்ற விரும்புவோர், நாளை காலை 6 மணிக்கு சற்று முன்பும் விண்ணப்பிக்கலாம், என மேற்படி குழுவினர் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், சனி

உரும்பராய் இந்துக் கல்லூரி பவளவிழாச் சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு விழாவும் இன்று 25ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் கல்லூரி அதிபர் செ. சிவபாலன் தலைமையில் நடைபெறும்,

சஞ்சிகையை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நிகழ்த்துவார்,

கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவை கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி ஆ. வ. தங்கராசாவும் பழையமாணவர் சங்கச் செயலாளர் எஸ். கே. மகேஸ்வரபூபனும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்கள்.

யாழ் கல்வித் திணைக்களப் பிரதம கல்வியதிகாரி கே சோமசுந்தரம் முன்னாள் அரச அதிபர் செ. சிவஞானம் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். [ச]

### பாதுகாப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்றால் முடியாது என்று கூறிய அரச அதிபர் ஜனாதிபதியை நேரில் சந்திக்கவரும்படி வேண்டுகோள்விடுத்தார்.

இம்மகாநாட்டில் யாழ் மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் சகல வங்கிகள், தொழில் திணைக்களம் மின்சாரசபை, விற்பனைத்திணைக்களம், மாவட்ட நீதிமன்றம். மேல் நீதிமன்றம், கல்லூரிகள் மாநகரசபை, மராமத்துப் பகுதி, வருமானவரித்திணைக்களம், மிருகவைத்தியநிலையம். வைத்தியசாலை, தபால். தொலைபேசி தொடர்பு திணைக்களம், யாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியர், வைத்தியசாலை நோயாளர்சங்கத்தைச்சேர்ந்த வணக்கத்துக்குரிய பிரான்ஸிஸ் டானியல், ஆகியோரும் இம்மாகாநாட்டில் பிரசன்னமாயிருந்தனர்.

இம்மகாநாட்டில் சகல அரச ஊழியர்களும் தமது பாதுகாப்பை வலியுறுத்திக்கருத்துக்கள் தெரிவித்தனர்

நேற்றய மகாநாட்டில் அரசாங்க ஊழியர்களின் பாதுகாப்புதொடர்பான தொடர் நடவடிக்கைகளுக்குசெயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

செயற்குழுவினர் கூட்டம் 29ம் திகதி புதன்கிழமை பகல் 2 மணிக்கு யாழ். வின்சர் படமாளிகையில் நடைபெறவுள்ளது. (வா-கே)

## உதைபந்தாட்டம்

இன்று ஆரம்பமாகும் உதைபந்தாட்டப் போட்டியில், 'ஏ' பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் யாழ்ப்பாணம் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயமும் மோதுகின்றன

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இப்போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். (வி)

## விடுதலைப்புலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியான ஒற்றுமையான சமுதாயத்தை உருவாக்குவதை அடிப்படை நோக்காகக் கொண்டு தமிழீழ கிராம நீதி மன்றுகள் இயங்கும்

கிராம சேவகர் பிரிவு ரீதியாக ஒவ்வொரு கிராம நீதி மன்றுகள் நிர்மாணிக்கப்பட்டு இயங்குகின்றன ஒரு குறிப்பிட்ட கிராம நீதிமன்றின் அதிகார எல்லை அக்கிராம சேவகர் பிரிவின் எல்லைக்குட்பட்டதாகும் ஒரு குறிப்பிட்ட கிராம சேவகர் பிரிவின் எல்லைக்குட்பட்டு வாழும் சகல கிராம மக்களும் அக்கிராமத்தில் அமைந்த தமிழீழ கிராம நீதி மன்றில் தம் வழக்கை தாக்கல் செய்யலாம்.

இந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது தமிழீழ மக்கள் சகலரும் முறைப்பாட்டுப் பத்திரத்தில் வழக்கைத் தாக்கல் செய்து கிராம நீதி மன்றிற்குச் சமர்ப்பிக்கலாம். ஒரு குறிப்பிட்ட வழக்கு சம்பந்தப்பட்ட மேன்முறையீடுகளை பிரதேச பொறுப்பாளரிடமோ நேரிலோ அல்லது கடித மூலமோ சமர்ப்பிக்கலாம்

இறுதியாக தமிழீழ கிராம நீதிமன்றங்கள் நீதி, நேர்மை கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்கும். விசாரணைக்குழு நடுநிலை நின்று சமூக நீதிக்கமைவான தீர்ப்பினை வழங்கி வழக்கின் இரு தரப்பினருக்கும் நீதி வழங்கப்பட்டதான திருப்தியுடன் தீர்ப்புக்கள் வழங்கப்படும் சட்டவிரோத செயற்பாடுகள் போன்றன நேரடியாக இயக்கத்தால் கையாளப்படும் விசாரணைகள் முதல் விசாரணைக்குழு அங்கத்தவர்களின் ஒழுங்கு விதிகள் தமிழீழ கிராம நீதிமன்றின் அமைப்பு அதிகாரம் அனைத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும்" [கே]

## விழிப்புலன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயத்தினர் மட்டுமல்லாது பஸ் சாரதிகள், நடத்துனர்கள், மற்றும் பொதுநலத் துறைகளில் கடமைபுரிவோர் யாபேரும் இந்த வெள்ளைப் பிரம்பின் மகத்துவத்தை அறியவேண்டும் திருமதி புனிதம் திருச்செல்வம் நாட்டுக்கு ஆற்றிய பணிகளை நாமனைவரும் நினைவுகூரவேண்டும் என்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பார்வை குறைந்த மாணவர்களான செல்வன் இரவீந்திரனும், செல்வி வைத்திலிங்கமும் இதில் கலந்து உரையாற்றினர்

புனிதம் விழிப்புலனற்றோர் சங்கம் சார்பில வீமன்காமம் மகாவித்தியாலய மாணவி செல்வி நகுலேஸ்வரிக்கு பிறெயிலி சிலேற் ஒன்று திருமதி பவானி மகாதேவனால் அன்பளிப்புச்செய்யப்பட்டது கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. (வா)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலைய பொதுக் கூட்டம் கடந்த புதன்கிழமை மேற்படி நிலையத்தலைவர் திரு க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பல நிகழ்ச்சிகளில் முக்கியமாக தீபாவளி விளையாட்டுப் போட்டியை வழமைபோல நடத்துவதா இல்லையா என்ற பொதுச்சபையின் தீர்மானத்துக்கு விடப்பட்டு பின் இன்றைய சூழ்நிலை கருதி விளையாட்டுப் போட்டியை அமைதியாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. [கே]

## இலங்கை இனப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணத்தை உருவாக்குவதற்கு எல்லை நிர்ணயக் கமிஷன் அமைக்கும் யோசனை அத்துடன் தொடர்புடைய விடயங்கள், புதிதாக அமைக்கப்படவுள்ள மாகாணத்திற்குச் சேர்க்கப்படவேண்டிய விவகாரங்கள் ஆகியவை மீள்பரிசிலனை செய்யப்பட்டு எழுத்துருவில் பெறப்பட வேண்டுமெனக் கருதப்படுகிறது.

அத்துடன் இலங்கை சமர்ப்பித்துள்ள யோசனைகளை யிட்டுப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு. தீவிரவாத இளைஞர்களுடன் தொடர்பு கொள்ளும் பணி தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதுடில்லிக்குச் செல்லுமுன் திரு ஜே. என். டிக்ஷிற் தமிழ் நாடு மின்சக்தி அமைச்சர், எஸ் இராமச்சந்திரன், மாநில அதிகாரிகள் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துள்ளார். [மா। கே]

## தமிழீழ...

(1ம பக்க தொடர்ச்சி)

டும். இவர்கள் விடுதலையின் விரோதிகள், எமது எதிரியை விட துரோகிகள், ஆபத்தானவர்கள், எமது எதிரியையும் அவர்களது நோக்கத்தையும் நாம் இனங்கண்டு கொள்வது சுலபம். ஆனால் எமது துரோகிகள் முகமூடியணிந்து நடமாடுகிறார்கள். எதிரியின் கைப் பொம்மையாகச் செயல்படுகிறார்கள்; தமது சுயநலத்திற்காகவும் வர்க்க அபிலாசைகளுக்காவும் சொந்த இனத்தையே காட்டிக் கொடுக்கத் தயங்காத இந்த ஆபத்தான பிற்போக்குச் சக்திகள் மீது எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் மாபெரும் விடுதலைச் சக்தியாக எமது இயக்கம் வளர்ச்சி கொண்டிருக்கின்றது. ஆயுதப் போராட்டத்திலும் எமது விடுதலை வீரர்கள் விளங்குகின்றார்கள். அரசியல் இலட்சியத்திலும் எமது இயக்கமே தெளிவுடனும் உறுதியுடனும் செயற்படுகிறது வெகுஜன அரங்கில் மிகப் பிரபல்யமும் மக்களின் நல்லாதரவும் பெற்றிருப்பதும் எமது விடுதலை இயக்கமே

"ஒரு சமாதான உடன்பாட்டு அடிப்படையில் சிங்கள அரசின் ஒற்றையாட்சியின் கீழ் நாம் பாதுகாப்பாக நிம்மதியாக சுதந்திரப் பிரஜைகளாக வழமுடியுமென நினைத்தது முழு முட்டாள்தனமும் தற்கொலைக்கு ஒப்பானதுமாகு சிங்கள அரசபயங்கரவாதிகள் எமது இனத்தை முற்றுகஅழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். என்பதை நாம் மிகக் கசப்பான கோரமான அனுபவங்கள்மூலம் உணர்ந்திருக்கிறோம் தனியாகப் பிரிந்து தனியரசை அமைப்பது பிரச்னைக்கு இறுதியான ஒரே தீர்வென்பதில் நாம் மனம்தளராது உறுதியாக இருக்கவேண்டும்

"இந்த அரசியல் இலட்சியத்தை நாம் அடைவதாயின் ஒரு புரட்சிகரவிடுதலை இயக்கத்தை பலம்பொருந்தியதாக கட்டிவளர்க்கவேண்டும். அந்த இயக்கம் முன்னெடுக்கும் விடுதலைப் போராட்டத்தில் மக்கள் வெறும் பார்வையாளராக இராது-நேரடிப் பங்காளராக மாறவேண்டும்." எனவும் அறிக்கை கூறுகிறது.

## கரிநாளாக கொண்டாடப்பட்டது

யாழ்ப்பாணம் சனி

ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் இலங்கை ஐ.நா சபை மதிக்கின்ற மனித உரிமைகளை மீறுவதால் நேற்று 24ந் திகதி ஐ. நா. தினத்தை கரிநாளாகக் கொண்டாடும்படி யாழ்ப்பாணத்திலுள்ள பொது ஸ்தாபனங்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று யாழ். நகரிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. (ச)

## ஆலய திறப்புவிழா

(பண்டத்தரிப்பு நிருபர்)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலய திறப்புவிழா இன்று 25ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது இன்றுகாலை ஏழுமணிக்கு திருநாள் திருப்பலி பூசை நடைபெறவுள்ளது திருப்பலியை பண்டத்தரிப்பு. சில்லாலை, மாதகல், இளவாலை ஆகிய நான்கு பங்குக்குரவர்களும் ஒப்புக் கொடுப்பார்கள்.

## நோன்பு பூசை

யாழ்ப்பாணம், சனி

யாழ் வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலயத்தில் கேதாரகௌரிநோன்பு பூசை நவம்பர்மாதம்முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

## 300 தொன்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வுகளூடாகவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாகவுமே, பயிர்ச்செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்படும்,

உடுவில் கமநலச்சேவைகளுக்கு 60 மெற்றிக் தொன்னும், கீரிமலை கமநலச் சேவைக்கு 6 மெற்றிக் தொன்னும், நல்லூர் கமநலச்சேவைக்கு 14 மெற்றிக் தொன்னும் நீர்வேலி ப.நோ கூ சங்கத்துக்கு 50 மெற்றிக் தொன்னும், அச்சுவேலி ப.நோ.கூ சங்கத்துக்கு 70 மெற்றிக்தொன்னும் வழங்கப்படும்.

நுவரெலியாவில் 1 பெட்டி விதைகிழங்கு 1000 ரூபாவாகும். ஏற்றி இறக்கும் கூலி, போக்குவரத்துச் செலவு என்பன உட்பட 1100 ரூபாக்கு கூடுதலாக 1 பெட்டி விதைகிழங்கு விற்கப்படக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் மேலும் கூறினார். [ச-கே]

## புத்தளத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெடிகுண்டாக இருக்கும் என சந்தேகித்த தொழிலாளி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.


பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து, குண்டுகளைச் செயலிழக்கச் செய்தனர். இச்சேவைக்காக வெடிகுண்டுகளைச் செயலிழகச் செய்யும் நிபுணர்களையும் பொலிசார் ஸ்தலத்துக்கு அழைத்திருந்தனர். [கூ- ஔ]

## இராணுவ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் முற்றாகத் தகர்க்கப்பட்டன. ஆஸ்பத்திரியிலுள்ள மருந்துவகைகள் பலகடைகளில் உள்ள பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மாந்தையில் ப நோ.கூ. லொறி ஒன்றும் எரிக்கப்பட்டது. (மா)



பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சுமார் 25 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட அன்னை வேளாங்கண்ணிமாதா ஆலயத்தின் அழகிய தோற்றத்தை படத்தில் காணலாம். இன்று 25-ம் திகதி சனிக்கிழமையன்று பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், இளவாலை பங்குத் தந்தைகளினால் நடாத்தப்படும் திருநாள் திருப்பலியை அடுத்து இந்த ஆலயம் திறந்து வைக்கப்படவுள்ளது. (படம்:- பண்டத்தரிப்பு நிருபர்)




வ. பி. போ. சபையின் பஸ் கட்டணங்கள் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதாகக் கதை அடிபடத் தொடங்கியுள்ளது.

சாவகச்சேரியில் இருந்து பரந்தனுக்கு வந்த ஒருவருக்குக் கட்டணமாக ரூபா 7/- எடுக்கப்பட்டுள்ளது. [ரிக்கட் இல: 628475 யாழ். டிப்போ] பரந்தனில் இருந்து சாவகச்சேரிக்கு ஒருவர் வந்தார். அவரிடம் கட்டணமாக 8 ரூபா வசூலிக்கப்பட்டுள்ளது (காரைநகர் டிப்போ ரிக்கட் இல: 878545) சாவகச்சேரியில் இருந்து பரந்தனுக்கு வேறொருவர் பிரயாணம் செய்தார். இவரிடம் ரூபா 7-50 கட்டணமாக அறவிடப்பட்டது. (ரிக் இல: 253013 முல்லைத்தீவு டிப்போ)

வரப்புயர நீர் உயரும் என்பதுபோல பஸ்கட்டணம் குளறுபடியானால், மினிபஸ்கட்டணமும் அதே வேகத்தில் உயரும். பாதிக்கப்படுவோர் காந்தி வகுப்பினரே!

பல கஷ்டங்களுடன் செயலாற்றும் வ. போ. ச. ''அற்றென்ஷசன் பிளீஸ்''

— பாணபத்திரன்
(தகவல்: கிளிநொச்சி நிருபர்)

## யாழ். மாவட்டத்திற்கு
# கப்பல் மூலம் உணவுப் பொருட்கள்

[நமது நிருபர்]

யாழ் மாவட்டத்தில் நிலவி வரும் உணவுத் தட்டுப்பாட்டைப் போக்குவதற்குக் கப்பல் மார்க்கமாக உணவுப் பொருட்களை அனுப்புவதற்கு உணவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதேவேளை மன்னார் மாவட்டத்துக்கு இந்த உணவுப் பொருட்களை ரெயில் மூலம் அனுப்டவதெனவும் திணைக்களம் முடிவெடுத்துள்ளது. ரெயில் மூலம் உணவு அனுப்பப் படும்போது இராணுவப் பாதுகாப்பும் அளிக்கப்படவுள்ளது,

கடந்த காலங்கள் யாழ் மாவட்டத்திற்கு கப்பல் மூலம் உணவுப் பொருள் அனுப்புவது வெற்றிகரமாக நடந்தேறியதாகவும் உணவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (மே)

## விவசாயிகள் கழகம்

கொடிகாமம். வெள் சாவகச்சேரி உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கச்சாயில் இளம் விவசாயிகள் கழகம் ஒன்று அங்குராப்பணம் செய்யப்பட்டது.

தலைவராக வ. கணபதிப்பிள்ளையும், உப தலைவராக சோ. வைத்திலிங்கம், செயலாளராக பொ. மனோகரியும், உப செயலாளராக பொ. மங்களசோதியும், பொருளாளராக இ. பாலசுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக 6 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்,

# இன்றைய பலன்

மாதம்:- ஐப்பசி
திகதி:- 8 [25-10-1986]
கிழமை:- சனிக்கிழமை
திதி:- ஸப்தமி பி. ப வரை
நக்ஷத்திரம்:- புனர்பூசம் பி. ப. வரை

மேடம்: வசதிகள் தோன்றும். வரவிலும் திருப்தி காணும். செல்வாக்குப் பெருகும். மகிழ்ச்சிகரமான தினம்,

இடபம்: தொழில் நன்றாற்றமுண்டு. பிறபொருள் வரவுமுண்டு. குடும்ப மகிழ்ச்சியும் உண்டு.

மிதுனம்; இனப்பூசலின் மூலம் இதயபாரம் தோன்றும். வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். தொழிலில் மந்தநிலை தோன்றும்.

கடகம்: கருத்து வேற்றுமைகள் உருவாகும். ஏமாற்றம் தாக்கும் குடும்பப் பிரிவுகளும் ஏற்படலாம்.

சிங்கம்: குடும்பத்திலும் புதிய மாற்றங்கள் ஏற்படலாம். திடீர் பயணமும் ஏற்படலாம். தொழில் நலனுமுண்டாம்.

கன்னி: சகோதர மனஸ்தாபம் ஏற்படும். தொழில் துறையில் நஷ்டம் ஏற்படும். உடல்நிலையும் பாதிக்கப்படலாம்

துலாம்: வணிகர்களுக்கு நன்னாள். புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாகவே இருக்கும்.

விருச்சிகம்: வசதிகள் ஏற்படும். வரவிலும் திருப்தி ஏற்படும். நீண்ட நாள் செய்தி இன்று கிட்டும்.

தனுசு: ஏமாற்றத்தால் தாக்கப்படுவீர்கள். வாழ்வும் சோர்வடையும். தலைவழிப் பயணத்தைத் தவிர்க்கவும்,

மகரம்: இதயச்சுமை இன்று அகலும். இல்லத்திலும் இனிமை தவழும். தொழில் துறையிலும் லாபம் ஏற்படலாம்.

கும்பம்; நடையில் தயக்கம் ஏற்படும். வழக்கு விவகாரம் தலைதூக்கும். தொழில் வீழ்ச்சி பெறும்.

மீனம்: அறவழிகளை மனம் நாடும். பொதுப்பணிகளை மனம் நாடும். வாழ்விலும் நன்மையான மாற்றம் விளையும்;

திருமலை
வே. ரவீந்திரன்

## நாளை மரதன் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம், சனி மாணவர் முன்னணியும், மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடாத்தும் விளையாட்டு விழாவின் மரதன் ஓட்டப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

இம்மரதன் ஓட்டப்போட்டியில் வடமாகாணத்தின் முன்னணி நீண்டதூர ஓட்டவீரர்களும், முன்னாள் வீரர்களும் பெருமளவில் கலந்துகொள்ள விருப்பது குறிப்பிடத்தக்கது.

பத்து மைல் மரதன் ஓட்டப் போட்டி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தனித்தனியாக நடைபெறவுள்ளது.

இம்மரதன் ஓட்டப்போட்டி நாளைகாலை 6 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சந்தியில் ஆரம்பமாகும். இந்த மரதன் ஓட்டப்போட்டிகள் சம்பந்தமாக மேற்படி குழுவினர் பல முன்னேற்பாடுகளைச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (வி)


# 25 வருடங்களுக்கு மேலாக நாம் ஆற்றும் உன்னத சேவை
## நீங்கள் எம்மிடம் முதலீடு செய்வதற்கு தரும் உத்தரவாதம்
# ஸ்டான்டர்ட் பினன்ஸ்

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக செயல்பட்டு வரும் எமது ஸ்தாபனம் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் முதலீட்டுக்கு உத்தரவாதம் வழங்கி நம்பிக்கையளிக்கிறது.

- கவர்ச்சிகரமான வட்டியை வழங்குவதுடன் பெரிய, சிறிய முதலீடுகள் என்ற பேதமின்றி சகலருக்கும் சமமான சேவையளிக்கின்றது.
- குறைந்த பட்ச முதலீடு, ரூபா 1000/-. விரும்பும் போது முதலீட்டை அதிகரித்துக் கொள்ளலாம்.
- வட்டியை மாதமொரு முறையாகவோ அல்லது காலாண்டுக்கொரு முறையாகவோ வருடாந்தமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
- முதலீட்டுக்கேற்றவாறு கடன் வசதிகளை பெறவும், தவணைமுறையில் பொருட்களை கொள்வனவு செய்யவும் வசதிகள் உண்டு.

இன்றே எம்முடன் தொடர்பு கொண்டு 25 வருடங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் பெற்று வரும் நலன்களை நீங்களும் பெறுங்கள்.

ஏப்ரல் 1ம் திகதி முதல் அமுலுக்கு வரும் புதிய வட்டி விகிதங்கள்.

நிதி நிலைமை தகவல்கள்

| | 1982/83 ரூபா | 1983/84 ரூபா | 1984/85 ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் | [illegible] | 1,700,000 | 1,700,000 |
| மூலதன ஒதுக்கீடு | 9,944,500 | 9,444,300 | 9,944,300 |
| வருவாய் ஒதுக்கீடு | 454,741 | 1,200,784 | 1,452,853 |
| மூலதனமும் ஒதுக்கீடும் | 12,099,241 | 12,342,364 | 13,097,152 |
| சேமிப்புகள் | 72,872,708 | 90,507,406 | 123,348,021 |
| கடன்கள் | | 3,211,633 | 1,484,521 |
| சேமிப்பாளர்களுக்கு வட்டி வழங்கு முன் கிடைத்த லாபம் | 15,034,105 | 23,101,763 | 24,658,633 |
| சேமிப்பாளருக்கு வழங்கிய வட்டி | 14,554,614 | 20,060,740 | 23,306,744 |
| வரிவிதிக்கு முன் கிடைத்த நிகர லாபம் | 479,491 | 3,041,023 | 1,351,888 |
| வரிவிதித்த பின் கிடைத்த நிகரலாபம் | 479,491 | 3,041,023 | 1,351,888 |
| ஆதாய பங்குவீதம் | 510,002 | 2,295,000 | 1,100,000 |
| | 30% | 135% | 65% |

1985ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி வரை சேமிப்புகள் ரூபா 13 கோடிக்கு மேல்.

இயக்குநர்கள்:
எச். எஸ். ஈ. குரே — தலைவர்
பா சட்டத்தரணி (இன்னர் டெம்பிள்) சட்டத்தரணி
F. B. I. M. (Eng) A: C. I. (Lond.)
எம். வி. தியாகராஜா, உப தலைவர், நிதி இயக்குநர்
F. C. M. A., F. C. I. A. A., F. B. I. M.
பி. ஞானசேகரம், செயலாட்சி இயக்குநர்
ஜே. கி. ஆர். குரே
F. C. M. A. M. B. I. M.
வீரசுன்ன எஸ். குணவர்தன
J. P. U. M. A. C. I. (Lond) A. I. Arb. (Lond)
சட்டத்தரணி, சட்ட ஆலோசகர், நொத்தாரிசு

முக்கிய வியாபாரங்கள்
தவணை முறை கொள்வனவுக்கு நிதி வழங்குதல்,
டிரக்டர், டிரெயிலர்கள், மோட்டார் வாகனங்கள்,
தேயிலை இயந்திரங்கள், வானொலி பெட்டிகள், சைக்கிள்கள்,
தொலைக்காட்சி பெட்டிகள் போன்ற பொருட்களை குத்தகைக்கு விடுதல்.

வட்டி விகிதங்கள்

| காலம் | | ஒரு மாதத்துக்கு | முதிர்ச்சிக்கு பின் |
|---|---|---|---|
| 6 | மாதங்கள் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | — | 15% |
| 1 | வருடம் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | 15% | 17% |
| 2 | வருடங்கள் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | 17% | 20% |
| 2 | வருடங்கள் ரூபா 100,000/- மும் அதற்கு மேலும் | 19% | 23% |

எம்மிடம் முதலீடு செய்வதே விவேகமானது

ஸ்டான்டர்ட் பினன்ஸ் லிமிட்டெட்
481, டார்லி வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: 597111

# கடற்றொழிலாளர் தமது பாதிப்புக்குறித்து அறிவிக்க வேண்டுகோள்

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ் மாவட்டத்தில் கடற்றொழிலுக்கு செல்லும் சமயங்களில் கடற்படையினரின் தாக்குதலுக் இலக்காகி உடைமைகளை பறி கொடுக்கும் கடற்றொழிலாளர்கள் உடனடியாக அப்பகுதி உதவி அரசாங்க அதிபருக்கும், கடற்றொழில் பரிசோதகருக்கும் அறிவிக்கும்படி மயிலிட்டி பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி பிரஜைகள் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து பேசியதன் விளைவாக எதிர்காலத்திலாவது கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிய வந்ததையடுத்தே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கடலில் பறிபோகும் வள்ளங்கள் இயந்திரங்கள் வலைகள் மற்றும் பொருட்கள் பற்றிய முழு விபரங்களையும் அப்பகுதி உதவி அரசாங்க அதிபருக்கும், கடற்றொழில் பரிசோதகருக்கும் தமக்கும் உடனடியாக அறிவிக்கும்படி மேற்படி பிரஜைகள் குழு கோரியுள்ளது.

## கைது

வவனியா, வெள்ளி

ஓமந்தை விவசாய பிரிவில் கடமையாற்றும் சிவானந்தன் கச்சேரி தடை முகாமில் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட திரு. சிவானந்தன் விசாரணைக்காக இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என அறியப்படுகின்றது.

## மின்மாற்றி பொருத்தப்பட்டது

கொழும்புத்துறை, வியாதாவடி மின்சார அபிவிருத்திச் சபை மேற்கெண்ட துரித நடவடிக்கைகளின் பயனாகத் தாவடி உப மின் நிலையத்திலிருந்து மின் விநியோகத்தைச் சீராக்கும் வகையில் புதிய பிரதான மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளது.

இம் மின்மாற்றியை உடன் பொருத்தி அமைத்தமைக்காக உடுவில் அபிவிருத்திச் சபை உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கும், மின் அத்தியட்சகருக்கும் பொது மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

''இருள் சூழ்ந்து கிடக்கும் எமது கிராம வீதிகள் யாவும் வீதி விளக்குகளால் வெளிச்சம் பெறச்செய்வதே எமது அடுத்த முயற்சியாகும் என்றும் எமது நடவடிக்கைகளுக்கு அதிகாரிகள் வழங்கிவரும் ஒத்துழைப்பு முன்மாதிரியானது என்றும் தாவடி மின்சார அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. து விசாகபதி தெரிவித்தார்,

## பிரவேசப் பரீட்சை

யாழ்ப்பாணம், சனி

யாழ். கல்வி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பெற்ற ஒன்பது பாடசாலைகளில் 1987ம் ஆண்டுக்கு ஆண்டு 7 வகுப்பில் சேர்ப்பதற்கான பிரவேசப் பரீட்சை இன்று 25-ந் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பிரவேசஅட்டைகள் அவரவர் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பிரவேச அட்டை கிடைக்காதவர்கள் தத்தமது பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். (ச)

## விசேட ஆராதனை

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் கேதாரகௌரி விரத வழிபாட்டையொட்டி விசேட பூசை, ஆராதனைகள் இடம் பற்று வருகின்றன.

மகளிரின் முக்கிய விரத தினமான இக் கேதார கௌரி விரதத்தில் விரதமிருந்து இறுதிநாளன்று நூல் கட்டுவதற்கு ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பதிவுசெய்துள்ளதுடன் தினமும் வழிபாட்டிலும் கலந்து கொள்கின்றனர்

விரதம் அனுஷ்டிப்போரின் வசதிக்காக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தளபாடம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் சனி.

விசுவமடு வித்தியாலயத்தில் மாணவர்களின் வரவைக்கருத்திற்கொண்டு 175 பிள்ளைகள் கற்கவசதியான தளபாடங்களை பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், விசுவமடு கிராம முன்னேற்றச்சங்கமும், நலன் விரும்பிகளும் அன்பளிப்புச் செய்து நீண்டகாலமாக இருந்துவந்த தளபாடப் பற்றாக் குறையின் ஒருபகுதியை நிவர்த்திசெய்துள்ளனர். (ஊ)

# பாடசாலை உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே சுற்றுப்போட்டி நடைபெற்றுவரும் சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் 'பி' பிரிவிலும், 'ஸி' பிரிவிலும் ஸ்கந்தவரோதயா வெற்றிபெற்றது. 'ஏ' பிரிவும் போட்டியில் இரு கோஷ்டியினரும் தலா இரு கோல்களைப் போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டிகள் அனைத்தும் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

## சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில்நடைபெற்ற போட்டியில் 'ஏ' பிரிவு ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் 1-0 கோலால் வெற்றிபெற்றது.

'பி' பிரிவு ஆட்டத்தில் ஸ்கந்தா 2-1 கோல்களாலும், 'ஸி' பிரிவு ஆட்டத்தில் சென் ஜோன்ஸ் 2-0 கோல்களாலும் வெற்றிபெற்றது.

இப்போட்டிகள் அனைத்தும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில்நடைபெற்றன.

சென். ஹென்றிஸ் கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென். ஹென்றிஸ் வெற்றி பெற்றது. (வி)

## பாரதி வி. க. வெற்றி

யாழ்ப்பாணம், சனி

இருபாலைபாரதிவிளையாட்டு கழகத்திற்கும் கோப்பாய்நாவலடி மாரியம்மன் விளையாட்டு கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற மூன்று உதைபந்தாட்டப் போட்டிகளில் பாரதி விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் 2:1 என்ற கோல்களால் பாரதி வி. க. வெற்றி பெற்றது.

இப் போட்டிகளுக்கு மத்தியஸ்தராக திரு. என். வி இராமலிங்கம் கடமையாற்றினார். [து]

## அறிவுப்போட்டி முடிவுகள்

வேலணை, வெள்ளி

வேலணை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தையொட்டி வேலணை இந்து வளர்ச்சிக்கழகமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடாத்திய சமய அறிவுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களது விபரங்கள் வருமாறு:

(1) செல்வன் க. விஜயகுமார், வேலணை.

(2) செல்வன் ச. தவஜீவன், வேலணை

(3) செல்வன் ச. ஆரமுதன் வேலணை. இரு ஆறுதல் பரிசுகள் செல்வன் சு ரவிகுமார், வேலணை, செல்வி பா. பாலராஜி, வேலணை. இவர்களுக்கான பரிசுகளை ஆலய அறங்காவல் சபைத் தலைவர் திரு வ. ஐயாத்துரை வழங்கினார் செயலாளர் இ, சற்குருநாதன் அனைவருக்கும் நன்றிகூறினார்

## கருத்தரங்கு

வேலணை, வெள்ளி

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களினதும் உறுப்பினர்கள் உத்தியோகத்தர் ஆகியோர்களுக்கிடையிலான கருத்தரங்கொன்று இன்று 25ம் திகதி காலை வேலணை ப நோ. கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

வேலணைப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் கூட்டுறவுத்திணைக்கள அலுவலர்கள், வீடமைப்பு அதிகார சபை அலுவலர்கள், கிராமசேவை அலுவலர்கள், கிராம அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவிருக்கின்றனர்.


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ✶ டென்மார்க் ★ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் எமது முகவர் அழைத்துச் செல்கிறார்;
உடனடியாக
எமது காரியாலயத்தில் தொடர்புகொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தமாகுங்கள்:

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்
Railway underground general workers
இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் 21 நாளில் செய்து கொடுக்கப்படும்

சவுதி, குவைற் - கிளீனேர்ஸ், சாரதிகள்
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

GROUP ATLANTIC TRAVELS

(அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்)
163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[A 2813]



## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்
# தீபாவளி விளையாட்டு விழா

**போட்டிகள்:**

1. ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி -20 மைல்கள்.
2. பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி -10 மைல்கள்.
3. வேகநடைப் போட்டி - 50 வயதுக்கு மேற்பட்டோர் - 1 மைல்.
4. வேகநடைப் போட்டி - 50 வயதுக்கு உட்பட்டோர்- 2½ மைல்கள்.

**காலம்:**

1986-11-01-ந் திகதி, சனிக்கிழமை -மு ப. 7 மணி தொடக்கம்.

**தகைமை:**

1. தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் 1986-10-15-ந் திகதிக்கு நேர்முந்தி ஆகக் குறைந்தது ஒரு வருடகாலம் வசித்திருக்க வேண்டும்.
2. சைக்கிள் ஓட்டப் போட்டிகளுக்கு- வயதுக் கட்டுப்பாடு இல்லை.
3. ஸ்ராண்டட் அளவுச் சைக்கிள் மாத்திரம் - அனுமதிக்கப்படும்;
4. பிரவேசப் பணம் ரூ 10/- செலுத்த வேண்டும்.

**பரிசுகள்:**

1. ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி:
   1-ம் பரிசு: சிங்கர் சைக்கிள்;
   2-ம் பரிசு: வெற்றிக் கிண்ணம்;
   3-ம் பரிசு: வெற்றிக் கிண்ணம்;
2. பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி:
   1-ம் பரிசு: சிங்கர் தையல் இயந்திரம்.
   2-ம் பரிசு: வெற்றிக் கிண்ணம்.
   3-ம் பரிசு: வெற்றிக் கிண்ணம்;
3. வேகநடைப் போட்டிகள் இரண்டிலும் பரிசு பெறுவோருக்கு பாட்டா பாதணிப் பொதிகள்.

**விண்ணப்பித்தல்:**

சாவகச்சேரி நவீன சந்தை 'விமலாஸ்' ஸ்தாபனத்தில் 1986-10-30-ந் திகதி நண்பகலுக்கு முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும் மேல் விபரங்களை அங்கு பெற்றுக் கொள்ளலாம்.

லயன் டாக்டர் பே. பிலிப்.
தலைவர்,
சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.

சாவகச்சேரி,
1986-10-22.

(C 5374)



## பிரயாண ஒழுங்குகள்

✶ டென்மார்க் ✶ ஜேர்மனி
✶ குவைத் ✶ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்து செல்வார்.

குவைத்தில் கீழ்க்காணும் வருமானவாய்ப்புகள் உண்டு. Cleaners, house boys, Gardners, House drivers. house Cook Sales boys and Girls ஆகியவற்றிற்கு செல்லவிரும்புவோர் உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

சவூதி Labourers ஆக செல்லவிரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்லவிரும்புவோர் 1-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்

விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-
N. Bala
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

பஸ் இல. 764,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-2817]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 25-10-86

# இலங்கைக்கு அமெரிக்கா அளிக்கவுள்ள இராணுவ உதவி உள்நாட்டு கலவரத்துடன் தொடர்புபட்டதல்ல

## சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரக உயர் அதிகாரி

(நமது நிருபர்)

''இலங்கைக்கு அமெரிக்கா அளிக்கும் இராணுவ உதவி, உலகளாவியமுறையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான ஒரு திட்டமெனக்கூறுவது சரியல்ல அமெரிக்காவின் நேச நாடுகளில் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்குச் சிவில் அதிகாரிகளுக்கும் அளிக்கும் உதவியே இது''

இவ்வாறு இலங்கைக்கு அமெரிக்கா அளிக்கவுள்ள இராணுவ உதவிபற்றி தகவல் வெளியிட்ட சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அதிகாரி டாக்டர் ஜோன் டி ஸ்டரம்பெல் குறிப்பிட்டார்

அவர் மேலும் கூறியுள்ளதாவது:

தற்போது ஆரம்பப் பேச்சுவார்த்தையில் இருக்கும்இலங்கைக்கான இராணுவ உதவி வான்பாதுகாப்புக்கும் சிவில் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கவுமே வழங்கப்படும். இந்த உதவி பயங்கரவாததடுப்புத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

தமது விளக்கத்தின் போது இந்தப் பயங்கரவாத திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவி இலங்கையில் நிலவும் உள்ளூர் அமைதியின்மையுடன் தொடர்புடையதெனக் குற்றம் சுமத்தப்படுவதாகக் கூறிய டாக்டர் ஸ்டாம் பெல், அப்படிக் கூறுவது சரியல்லவெனவும் தெரிவித்தார்.

இப்படியான உதவிகள் அநேக நாடுகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் தற்போது இவ்வகையான உதவிதொடர்பாக இந்திய அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடக்கின்றதெனவும் கூறினர்.

# கிரிக்கெட் பாகிஸ்தான் 1 ம் இனிங்ஸ் - 159

இஸ்லாமபாத் அக் 24.

பாகிஸ்தான் - மே. இந்திய அணிகளுக்கிடையில் பைசலாபாத்தில் நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதலாம் நாள் பாகிஸ்தான் முதல் இனிஸ்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

மதிய போசன இடைவேளையின் போது 5 விக்கெட் இழப்பிற்கு 101 ஓட்டங்களை பெற்றிருந்த பாகிஸ்தான் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

முதலாம் நாள் ஆட்ட முடிவில் மே இந்திய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 54 ஓட்டங்களை பெற்றிருந்தது.

# ,,இனப்பிரச்னைக்கு 47-ம் ஆண்டின் பின் பதவிக்கு வந்த சகல அரசுமே பொறுப்பு''

கொழும்பு, வெள்ளி

''இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு 1947 ம் ஆண்டின் பின்னர் பதவிக்கு வந்த சகல அரசாங்களும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் ''

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா அவசர கால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் பேசுகையில்:

இனப்பிரச்னையை சமாதான முறையில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் நியாமாயன தீர்வொன்றைக் காண்பது அவசியமாகும் என்றும் கூறினர்

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியும், ஜே வி. பி. யும் இப்பிரச்னைக்கு ஒர் தற்காலிக தீர்வை எடுக்கவே முயற்சிக்கின்றன என்றார்.

இதனை தொடர்ந்து நடைபெற்ற வாக்களிப்பில் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பதற்கான பிரேரணை நிறைவேறியது.

கலவான தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் எதிர்த்து வாக்களித்தார். (சி)

# காஸ் சிலிண்டர் எடுத்துவர இராணுவ அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ். போதனை வைத்திய சாலையில் உள்ள அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவிற்கான ''காஸ் சிலிண்டர்களை'' கொழும்பில் இருந்து லொறியில் கொண்டு வருவதற்கான அனுமதி பலாலி இராணுவ உயர் அதிகாரிகளால் வழங்கப்படவில்லை.

அனுமதி மறுக்கப்பட்டதை தொடர்ந்து காஸ் சிலிண்டர்களை கப்பல் மூலம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை யாழ். போதனாவைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி. எஸ் நச்சினார்க்கினியர் முயற்சி எடுத்துவருகிறார். (வா)

# எத்தாக்குதலிலும் ஈடுபடமாட்டோம்

யாழ்ப்பாணம், சனி

உலக சமாதான தினமான இம்மாதம் 27-ம் திகதி எந்தத் தாக்குதலிலும் ஈடுபடமாட்டோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலக சமாதான தினத்தையொட்டி அதற்கு மதிப்பளிக்கும் முகமாகவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உயரிய இலட்சியத்தை சர்வதேச ரீதியில் பறைசாற்றும் முகமாகவும் ஸ்ரீலங்கா ஆயுதப் படையினரின் தாக்குதலை முறியடிக்கும் முகமாகவன்றி எத்தாக்குதலிலும் ஈடுபடமாட்டோம் என அறியத் தருகிறோம். (மா)

# மரண அறிவித்தல்

### சைவப்புலவர் சின்னையா அருளம்பலம்

தம்பசெட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த சைவப் புலவர் சி. அருளம்பலம் காலமானார். இவர் காலஞ்சென்ற தெய்வதயானையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சதாசிவம், தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சகுந்தலாதேவி இந்திரராசா (ஆசிரியை வட இந்துமகளிர் கல்லூரி). நரேந்திரன் (யாழ் பல்கலைக்கழகம்), அருந்ததிதேவி சுந்தரமூர்த்தி (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி), பூமாதேவி, சிவபாலன் (ஆசிரியர், தமிழ் வித்தியாலயம் நீர்கொழும்பு), குமுதமலர் (தாதிகள் பாடசாலை), சோதிமயம், இரவீந்தரன் ஆகியோரின் சிறிய தந்தையும், சிவகுருநாதன் (ஹாட்லிக் கல்லூரி) சிவகடாட்சம், திருமதி சர்வேஸ்வரி நரேந்திரன் (ஆசிரியை) ஆகியோரின் மாமனாருமாவார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் சனிக்கிழமை 25-10-86 (இன்று) காலை 9 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(C 5404) தகவல்: ச. நரேந்திரன்.

### திருமதி. இராஜேஸ்வரி தியாகராசா

காலம் சென்றவே சுந்தரம்பிள்ளையினதும் திருமதி தங்கம்மாவினதும் அருமை மகளும் திரு தியாகராசா (பெற்றோலியம் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியுமான திருமதி இராஜேஸ்வரி தியாகராசா (ஆசிரியை யாழ். கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியா சாலை) காலமானார் இவர் ஜெயந்தி (யாழ் பல்கலைக்கழகம்), சுகந்தி (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி), ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் (முன்னைநாள் C T B பரிசோதகர்) பாக்கியராசா (பிரான்ஸ்) சண்முகராசா (பிரான்ஸ், மு நா. மா உ), ஆனந்தராசா (ஜேர்மனி, தேவராசா (பிரான்ஸ்), ஜெயந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 18, அம்மன் வீதி, கந்தர்மடம் இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு 25-10-86 (இன்று) சனிக்கிழமை மாலை 3 மணியளவில் எடுத்துச் செல்லப்படும் உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ. தியாகராசா

(C 5390)

### திருமதி சுகிர்தமலர் நல்லையா

காலஞ்சென்ற உரும்பராய் இலங்கையர் தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பூபாலசிங்கம், காலஞ்சென்ற புஷ்பமணி குணரத்தினம், காலஞ்சென்ற ஜெபரத்தினம், மனோன்மணி சைமன் இராசையா, சற்குணமணி செல்வரத்தினம், ஜெயமலர் ஜீவநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமான சுகிர்தமலர் 24-10-86 காலமானார் நல்லடக்க ஆராதனை 25-10-86 சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் நடைபெற்று கோப்பாய் சென் மேரீஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார். நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அ. குணரத்தினம்.

(C 5400)

# மரண அறிவித்தல்

### குமாரசிங்கம் வல்லிபுரநாதன்
### ஊரெழு

24-10-86 'ஈழநாடு' பத்திரிகையிலும் 'உதயன்' பத்திரிகையிலும் அறிவித்தபடி அன்னாரின் ஈமைக்கிரிகை 25-10-86 சனிக்கிழமை (இன்று) முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பொக்கணை மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்

(C5384)

### பண்டிதை சத்தியதேவி

கடந்த 23ம் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட்ட நீர்வேலி பண்டிதை சத்தியதேவி அம்மையாரின் மரண அறிவித்தலில் சில பிழைகள் தவறுதலாக ஏற்பட்டுவிட்டன

திருத்தம் பின்வருமாறு

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்கள் காலஞ்சென்ற திருமதி சேதுப்பிள்ளை சின்னத்தம்பி (உருகதிரபுரம்), திரு நா. கணபதிப்பிள்ளை (திருவையாறு), காலஞ்சென்ற திருமதி வள்ளியம்மை குமாரசாமி (நெடுந்தீவு), திரு நா குருநாதன் (இளைப்பாறிய அதிபர் உருத்திரபுரம் மகாவித்தியாலயம்) கந்தர்மடம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்,

தவறுதலுக்கு வருந்துகின்றோம்.

தகவல்: து. விநாயகலிங்கம் (மகன்)(C5397)

### மனோ கதிர்காமர்

இலங்கை வங்கி இலண்டன் லொயிட் வங்கி ஆகியவற்றின் முன்னைநாள் ஊழியரும், பத்மராணியின் அன்புக் கணவரும். அஜித். நிஜ ஆகியோரின் அன்புத் தந்தையுமான மனோ கதிர்காமர் 19-10-86 இல் இங்கிலாந்தில் காலமாகிவிட்டார். அன்னாரின் நல்லடக்கம் 25-10-86 (இன்று) சனிக்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும்

விலாசம்: No. 33 The Glen Vil'age Way, Pinner - Has - 5 Ax, Middle Sex England.

தகவல்: திருமதி இராஜமோகன்.
பாடசாலை ஒழுங்கை, வட்டுக்கோட்டை.

(C 5381)

### பொன்னம்பலம் கந்தையா

பொன்னம்பலம் கந்தையா (சட்டத்தரணியும், முன்னாள் ஸ்ரீ முருகன் ரேடிங் கொழும்பு உரிமையாளரும்) 22-10-86-ல் காலமானார். அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வள்ளி, ஸ்ரீவதனி ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், டாக்டர் சுவாமிநாதன், மகேந்திரன், வேலுப்பிள்ளை பாலகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், டாக்டர் சின்னத்தம்பியின் மைத்துனரும், காலஞ்சென்ற ஓவசியர் சின்னையா சரவணமுத்து ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இலக்கம் 3, டீ பொன்சேகா பிளேஸ், கொழும்பு-4 இல் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து 26-10-86 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குத் தகனக்கிரிகைகளுக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: டாக்டர் சுவாமிநாதன் மகேந்திரன்.

C 5398

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O, Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126